# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1419/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | விஸ்வதாஸ் | த-பெ | காளிதாஸ் |
| ஊர்: | : | அமராவதிபுதூர் | | |
| வயது: | : | 58/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ரியல் எஸ்டேட் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.08.2026**

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

-------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் அமராவதிபுதூரில் வசித்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. மூன்று வருடங்களுக்கு முன்பு நான் சோமநாதபுரம் காவல் நிலையம் சென்றேன். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன். போலீசார் கொடுத்த ஆவணத்தில் கையொப்பம் செய்தேன். மற்றபடி வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 06.02.2021 அன்று 9.30 மணிக்கு அமராவதிபுதூர் சமத்துவபுரம் கிராம சபை கட்டிடம் அருகில் நின்று பேசி கொண்டிருந்தபோது சோமநாதபுரம் போலீசார் குற்ற எண். 7/2021 என்ற வழக்கு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.19 14:04:46 +05'30'

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.